## October 4, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. தமிழகத்தில் அழிவின் விளிம்பில் உள்ள 4 உயிரினங்களைப் பாதுகாக்கும் வகையில் ரூ.1 கோடியில் புதிய திட்டம் ஒன்றை தமிழக அரசு அறிவித்துள்ளது. தமிழகத்தில் மேற்கு மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைகளைக் கொண்ட பகுதிகள், உலகளவில் பல்லுயிர்பெருக்க மையமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.
   i. மேற்குத் தொடர்ச்சி மலை பகுதிகளில் காணப்படும் சிங்கவால் குரங்கு,
   ii. தமிழ்நாடு, ஆந்திரம், கேரளத்தின் வறண்ட நிலப்பரப்புகளில் காணப்படும் மெட்ராஸ் முள்ளம்பன்றி,
   iii. முதுமலை புலிகள் காப்பக நிலப்பரப்பில் வாழும் கழுதைப் புலி,
   iv. மோயாறு ஆற்றில் வாழும் கூம்புத் தலை மஹ்சீர் மீன் வகை ஆகியவை.
2. கீழடியில் திறந்தவெளி அருங்காட்சியகம் வருகிற ஜனவரியில் திறந்துவைக் கப்படும் என முதல்வர் மு.க.ஸ்டா லின் தெரிவித்தார்.
   i. கீழடி திறந்தவெளி அருங் காட்சியகம் வருகிற ஜனவரியில் திறக்கப்படவுள்ளது.
   ii. பொருநை அருங்காட்சியகம் வருகிற டிசம்பர் மாதத்திலேயே மக்கள் பார்வைக்கு திறந்துவைக்கப்படவுள்ளது.
   iii. கங்கைகொண்ட சோழபுரத்தில் மற்றுமொரு அருங்காட்சியகம் எழுந்து வருகிறது.
   iv. பூம்புகார் ஆழ் கடல் ஆய்வுகள் தொடங்கிவிட்டன என்று தெரிவித்தார்.
3. 2025-ஆம் ஆண்டுக்கான நோபல் பரிசுகள் அடுத்தவாரம் முதல் அறிவிக்கப்படவுள்ளன. உலகின் மிகப்பெரிய கௌரவமாகக் கருதப்படும் இது, மருத்துவம், இயற்பியல், வேதியியல், இலக்கியம், பொருளாதாரம், அமைதி ஆகிய பிரிவுகளின் கீழ் வழங்கப்படுகிறது.
   i. கடந்த 2018-ஆம் ஆண்டில் இருந்தே அமைதிக்கான நோபல்பரிசுக்காக பரிந்துரைக்கப்பட்டுவரும் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், இஸ்ரேலுக்கும் அரபு நாடுகளுக்கும் இடையே ஆபிரஹாம் ஒப்பந்தத்தை ஏற்படுத்தியதற்காக இந்த முறையும் பரிந்துரைக்க பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.
4. கடந்த 2023-ஆம் ஆண்டு நாட்டில் ஒரு மணி நேரத்துக்கு ஒரு விவசாயி தற்கொலை செய்துகொண்டது தேசிய குற்ற ஆவணக் காப்பக (என்சிஆர்பி) அறிக்கை மூலம் தெரியவந்துள்ளது.
   i. அந்த அறிக்கையின்படி, 2023- ஆம் ஆண்டு நாட்டில் மொத்தம் 1,71,418 பேர் தற்கொலை செய்து கொண்டனர். அவர்களில் 10,786 பேர் (மொத்த தற்கொலையில் 6.3%) விவசாயத்தில் ஈடுபட்டவர்கள். 10,786 பேரில் 43 சதவீதம் பேர், அதாவது 4,690 பேர் விவசாயிகள், 6,096 பேர் விவசாயத் தொழிலாளர்கள். தற்கொலை செய்துகொண்ட விவசாயிகளில் 4,553 பேர் ஆண்கள், 137 பேர் பெண்கள். இதில் 38.5 சதவீத தற்கொலைகள் மகாராஷ்டிரத்தில் நடைபெற்றுள்ளன. இதைத்தொடர்ந்து கர்நாடகத்தில் 22.5 சதவீதம், ஆந்திரத்தில் 86 சதவீதம், மத்திய பிரதேசத்தில் 7.2 சதவீதம், தமிழ்நாட்டில் 5.9 சதவீத தற்கொலைகள் நிகழ்ந்துள்ளன.
   ii. கடந்த 2022-ஆம் ஆண்டு விவசாயத்தில் ஈடுபட்டோரில் தற்கொலை செய்துகொண்டவர்களின் எணிக்கை 11,290.
   iii. 2022-ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023-ஆம் ஆண்டு விவசாயத்தில் ஈடுபட்டோரின் தற்கொலைகள் குறைந்துள்ளது. ஆனால் அவர்கள் தற்கொலை செய்துகொண்டதற்கான காரணத்தின் தீவிரமும், அவர்களின் தற்கொலை அதிகமாக நிகழும் பகுதிகளும் மாறாமல் அப்படியே உள்ளன.
   iv. ஒரு காலத்தில் விவசாயம் வளமாக இருந்த மண்டலங்கள், தற்போது விவசாயத்தில் நம்பிக்கை இழந்து வறுமையால் பாதிக்கப்பட்டுள்ளன.
   v. அதேவேளையில் மேற்கு வங்கம், பிகார், ஒடிஸா, ஜார்க்கண்ட், ஹிமாசல

பிரதேசம், அருணாசல பிரதேசம், கோவா, மணிப்பூர், மிஸோரம், நாகாலாந்து, திரிபுரா, சண்டீகர், தில்லி, லட்சத்தீவு ஆகிய மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் விவசாயத்தில் ஈடுபடும் எந்தவொரு நபரும் தற்கொலை செய்துகொள்ளவில்லை.

5. நார்வேயில் நடைபெறும் பளுதூக்குதல் உலக சாம்பியன்ஷிப்பில், இந்திய வீராங்கனை மீராபாய் சானு வெள்ளிப் பதக்கம் வென்றார்.
6. உலக பாரா தடகள சாம்பியன்ஷிப்பில், இந்தியாவுக்கு 2 தங்கம், 2 வெண்கலம் என 4 பதக்கங்கள் கிடைத்தன.
   i. ஆடவர் உயரம் தாண்டுதல் டி47 பிரிவில், நிஷாத் குமார் சிறந்த முயற்சியாக 2.14 மீட்டரை தாண்டி தங்கம் வென்றார்.
   ii. மகளிர் 100 மீட்டர் டி12 பிரிவில் சிம்ரன் 11.95 விநாடிகளில் இலக்கை அடைந்து, பெர்சனல் பெஸ்ட்டுடன் தங்கத்தை தட்டிச் சென்றார்.
7. ரஷியாவிடம் இருந்து கூடுதலாக எஸ்-400 வான் பாதுகாப்பு அமைப்புகளைக் கொள்முதல் செய்ய இந்தியா பரிசீலித்து வருவதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.
   i. சமீபத்தில் இந்தியா-பாகிஸ் தான் ராணுவ மோதலின்போது, அந்நாட்டில் இருந்து ஏவப்பட்ட ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களை நடுவானிலேயே முறியடித்து, இந்தியப் பகுதிகளின் பாதுகாப்பை உறுதி செய்ததில் எஸ்-400 வான் பாதுகாப்பு அமைப்பு முக்கியப் பங்காற்றியது.
8. முதுபெரும் இதழாளர், எழுத்தாளர், கட்டுரையாளர், எக்ஸ்பிரஸ் பப்ளிகேஷன்ஸ் (மதுரை) பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் இயக்குநர், தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆங்கில நாளேட்டின் ஆசிரியர் குழு ஆலோசகர் டி.ஜே.எஸ்.ஜார்ஜ் (97) பெங்களூரில் காலமானார்.
9. இந்தியாவில் இருந்து அதிக அளவில் வேளாண்மை உற்பத்திப் பொருள்கள், மருந்துகளை இறக்குமதி செய்ய ரஷிய அதிபர் விளாதிமீர் புதின் உத்தரவிட்டுள்ளார்.
   i. ரஷியாவிடம் இருந்து இந்தியா அதிக அளவில் கச்சா எண்ணெய் கொள்முதல் செய்வதால் இரு நாடுகள் இடையிலான வர்த்தக சமநிலையில் பிரச்னை ஏற்பட்டுள்ளது. இதற்குத் தீர்வுகாணும் வகையில் இந்த நடவடிக்கையை புதின் மேற்கொண்டுள்ளார்.
   ii. இந்தியப் பொருள்கள் மீது 50 சதவீத வரி விதித்த அமெரிக்க அதிபர் டிரம்ப்புக்கு பதிலடி தரும் நடவடிக்கையாகவும் இது கருதப்படுகிறது.
10. செய்திகளில் இடம்பெற்ற சில முக்கிய நபர்கள் :-
   i. அமர் பிரீத் சிங் - இந்திய விமானப்படைத் தளபதி
   ii. உபேந்திர திவேதி - இந்திய ராணுவத் தளபதி ஜெனரல்